மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 34/1987) திருத்தப்பெற்றபடி நிறை வேற்றப் பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன் வடிவு திருத்தப் பெற்றபடி நிறைவேற்றப்பெற்றது.

(3) அரசினர் தீர்மானங்கள்.

(அ) விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றை தளர்த்தல்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர் களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''சட்டமன்றப் பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132-ஐ தளர்த்தி கீழ்க்கண்ட சட்ட முன்வடிவுகளை இன்றே ஆய்விற்கு எடுத்துக் கொள்ளவேண்டும்:

1. 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (இரண் டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 35/1987).

2. 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 36/1987).

3. 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 37/1987).

4. 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப்படங்கள் (முறைப் படுத்தல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை (சட்ட முன்வடிவு எண். 38/1987).

5. 1987—ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர்ப் பகுதி நிலத்தடி நீர் (முறைப்படுத்துதல்) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 39/1987).

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறை வேற்றப் பெற்றது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS